*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*06 10 2025 MONDAY 12 40 PM*
*வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.*
- *பீகார் சட்டப்பேரவை தேர்தல் அட்டவணை இன்று மாலை வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*
- *ஜம்மு கஷ்மீர் மற்றும் பஞ்சாபிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.*
- *மேற்குவங்க மாநிலம், டார்ஜிலிங்கில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.*
- *உலக ஜூனியர் பேட்மிண்டன் குழு சாம்பியன் போட்டி இன்று குவஹாத்தியில் தொடங்கியது.*

*>>>>>><<<<<<*

*ராஜஸ்தான், ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான் சிங் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மருத்துவமனையில் உள்ள நோயாளிகளின் பாதுகாப்பிற்காக, அரசு நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.*

*இந்த விபத்து குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மாவுடன் தாம் தொலைபேசி மூலம் இதுகுறித்து பேசியதாகவும், மீட்பு பணிகள் மற்றும் சுகாதார வசதிகள் குறித்து கேட்டறிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த தீ விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.*

*மின்கசிவால் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*>>>>>><<<<<<*

*பீகார் சட்டப்பேரவை தேர்தல் அட்டவணை இன்று மாலை வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar, தேர்தல் ஆணையர்கள் திரு. Sukhbir Singh Sandhu, திரு. Vivek Joshi ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து இதுதொடர்பான அறிவிப்புகளை வெளியிடவுள்ளனர்.*

*243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவையின் பதவிக்காலம் அடுத்த மாதம் 22ஆம் தேதி நிறைவடையவுள்ள நிலையில், சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படவுள்ளன.*

*பீகாரில் தேர்தல் முன்னேற்பாடுகளை பார்வையிட்ட பின், புதுதில்லி திரும்பிய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள், அங்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.*

*இதனையடுத்து இன்று பீகார் சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் குறித்த அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பீகாரில் முதலமைச்சரின் மகளிர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், 21 லட்சம் பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் இன்று வழங்கினார்.*

*இத்திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது.*

*இத்திட்டத்தின் கீழ் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கோடியே 10 லட்சம் பெண்கள் பயன்பெறுவார்கள் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் தேதி இத்திட்டத்தை புதுதில்லியிலிருந்து காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.*

*பீகார் மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் இன்று மாலை அமலுக்கு வரவுள்ள நிலையில், இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.*

*>>>>>><<<<<<*

*ஜம்மு கஷ்மீரிலிருந்து 4 மாநிலங்களவை உறுப்பினர்களையும், பஞ்சாபிலிருந்து ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வரும் 24ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.*

*வேட்புமனு தாக்கல் வரும் 13ஆம் தேதி வரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*14ஆம் தேதி மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.*

*அக்டோபர் 16ஆம் தேதி வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளாகும்.*

*வரும் 28ஆம் தேதி முடிவுகள் அறிவிக்கப்படும்.*

*பஞ்சாபில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த திரு. சஞ்சீவ் அரோரா கடந்த ஜூலை 1ஆம் தேதி தமது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.*

*ஜம்மு கஷ்மீரில் 4 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.*

*>>>>>><<<<<<*

*இந்தியக் கடற்படையின், இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்புக் போர்க் கப்பலான Androth, இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.*

*விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படையின் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் ராஜேஷ் Pendharkar பங்கேற்று, இக்கப்பலின் சேவையை தொடங்கி வைத்தார்.*

*80 சதவீதம் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல், கடலோரப் பகுதிகளிலும், அலைகளுக்கு இடையேயும், எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் திறன் கொண்டாகும்.*

*>>>>>><<<<<<*

*பிஜேபி மூத்த தலைவர் காலஞ்சென்ற வி.கே. மல்ஹோத்ரா, அரசியல் பணி, சமூக சேவை மற்றும் விளையாட்டுத் துறையில் சிறப்பாக சேவையாற்றியவர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.*

*வி.கே. மல்ஹோத்ரா குறித்து பிரதமர் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையில், அவரது வாழ்க்கை பிஜேபி, ஜன்சத், ஆர்.எஸ்.எஸ் கொள்கைகளுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*சமூக சேவையில் ஈடுபட்ட அவர், மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண அயராது பாடுபட்டவர் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியா வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், உற்பத்தி துறையில் பணிபுரிவோருக்கு, மாதந்தோறும் 10 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுவோருக்கு ஆயிரம் ரூபாயும், 20 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுவோருக்கு 2 ஆயிரம் ரூபாயும், 20 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை ஊதியம் பெறுவோருக்கு 3 ஆயிரம் ரூபாயும் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று சென்னை வடக்கு மண்டல சேமநல நிதி ஆணையர் திரு. தேவிபிரசாத் பட்டாச்சார்யா கூறியுள்ளார்.*

*சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த ஊக்கத்தொகை அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.*

*மத்திய அரசின் E-shram இணையதளத்தில் பதிவு செய்வோர் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்தார்.*

*பணி செய்ததற்கான ஆதாரங்கள், உயிரி வருகைப்பதிவு முறையிலான ஆதார் கணக்கு மூலம் சேகரிக்கப்படும் என்றும் திரு. தேவிபிரசாத் பட்டாச்சார்யா கூறினார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டில் தோட்டப் பயிர்கள் சாகுபடியை மேம்படுத்தி, விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் மத்திய அரசு தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தின் பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் - பைட் - செல்வராஜ் 39 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்க மாநிலம், டார்ஜிலிங்கில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.*

*இதனையடுத்து, மேற்குவங்க ஆளுநர் திரு. சி.வி. ஆனந்த போஸ் தமது, தமிழக மற்றும் கேரள சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு மேற்குவங்கம் திரும்பினார்.*

*டார்ஜிலிங்கில் மீட்புப் பணிகளை அவர் நேரடியாக பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து பேசவுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்கம் மற்றும் சிக்கிமில் நிலச்சரிவு மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக இருப்பதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.*

*டார்ஜிலிங்கில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் உயிரிழந்த 24 பேரின் குடும்பத்தினருக்கு அவர் இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*மேற்குவங்கத்தின் வடக்குப் பகுதியில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா உறுதியளித்தார்.*

*>>>>>><<<<<<*

*ஒடிசா மாநிலம். கட்டாக்கில் நாளை காலை வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*அங்கு இணையதள சேவை முடக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

*துர்கா பூஜாவை ஒட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட வன்முறையை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*சத்திஷ்கட் மாநிலத்தில் நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட Bastar பகுதியில் மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படையினர் 10 ஆயிரம் வானொலிப் பெட்டிகளை மக்களுக்கு வழங்கினர்.*

*அரசு நலத்திட்டங்கள் குறித்து அப்பகுதி மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், இந்த வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*உலக ஜூனியர் பேட்மிண்டன் குழு சாம்பியன் போட்டி இன்று குவஹாத்தியில் தொடங்கியது.*

*வரும் 19ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், இந்தியா, சீனா, ஜப்பான், இந்தோனேஷியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.*

*>>>>>><<<<<<*